நகரமன்றம் குடியாத்தம் நாள்: 20.08.2018

# அறிவிப்பு

**2018–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20–ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெறும்.**

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி, பி.இ., தனி அலுவலர்**

## நிகழ்ச்சி நிரல்

1. அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:19.07.2018-ல் 01.04.2018 முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும் வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 26.07.2018-ல் ஏற்கனவே வழங்கப்பட்ட அரசாணையில் உத்தரவிடப்பட்ட வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் 100 சதவிகிதத்திற்கு மிகாமல் என்பதை தற்போது 50 சதவிகிதத்திற்கு மிகாமல் சொத்துவரி உயர்வு செய்திட திருத்திய உத்தரவு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையின் விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :** 1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். 2. அரசாணையின்படி 01.04.2018-ம் தேதி முதல் சொத்துவரி சீராய்வு செய்திட அனுமதிக்கலாம். (ந.க.எண்: அ2/1819/2018)

2. அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:19.07.2018 மற்றும் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:26.07.2018-ல் 01.04.2018-ம் தேதி முதல் சொத்து வரி சீராய்வு (Revision-2018) மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 16.08.2018-ம் தேதிய சொத்துவரி சீராய்வு தொடர்பான ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படி சொத்துவரி சீராய்வு தொடர்பான நாளிதழ் விளம்பர அறிவிப்பு, மாஸ்டர் பதிவேடு (Master Ledger) தயார் செய்தல் உரிய சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சடித்தல், நகல் எடுத்தல் மற்றும் சிறப்பு அறிவிக்கை (Special Notice) சொத்துவரி விதிப்புதாரர்களுக்கு கூரியர் மூலம் சார்வு செய்திடவும் மற்றும் இதர உத்தேச செலவினம் ரூ.12.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:அ2/1819/2018

3. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள அனுமதி பெறாத மனைப்பிரிவுகளை வரண்முறைப்படுத்த தற்போது நடைமுறையில் உள்ள அனுமதி பெறாத மனைப்பிரிவுகளை வரண்முறைப்படுத்தும் திட்டம் 2017-2018-ன் கீழ் 03.11.2018 வரை உள்ள காலத்திற்குள் ஏற்கனவே மனையை கிரயம் பெற்ற நபர்கள் உடனடியாக நகராட்சி அலுவலகத்தை அணுகி ட௱டுஐ௱ு கட்டணம் ரூ.500/- செலுத்தியும், வரண்முறைக்கட்டணம் ரூ.60/- ஒரு சதுர மீட்டருக்கும் அபிவிருத்திக்கட்டணம் ரூ.150/- ஒரு சதுர மீட்டருக்கும் செலுத்தியும் இத்திட்டத்தின் கீழ் வரண்முறைப்படுத்தப்படாத மனைப்பிரிவுகளுக்கு அடிப்படை வசதிகளான
1. சாலை வசதி 2. கழிவு நீர் கால்வாய் 3. மின்கம்ப வசதி மற்றும்
4. கட்டிட அனுமதி போன்றவைகள் முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு மட்டுமே முன்னுரிமை அடிப்படையில் செய்யப்படும் எனவும், முறைப்படுத்தப்படாத மனைப்பிரிவுகளுக்கு நகராட்சியால் செய்யப்படமாட்டாது எனவும், உடனடியாக தங்களது அனுமதி பெறாத மனைகளை வரண்முறைப்படுத்திக் கொள்ள தெரிவித்து தமிழ் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான தோராய செலவீனம் ரூ.25,000/-க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.836/2017/எப்1)

4. 2018ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20-ம் தேதிகாலை 11.00 மணியளவில் குடியாத்தம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட நடைவடிக்கைகள்.

**முன்னிலை:-** திரு.ச.செல்வபாலாஜி. பி.இ,
ஆனையாளர், குடியாத்தம் நகராட்சி.

குடியாத்தம் நகராட்சியில் உயிரியல் பல்வகைமை சட்டம் - 2002 (மத்தியச்சட்டம்), உயிரியல் பல்வகைமை விதிகள் - 2004 மற்றும் தமிழ்நாடு உயிரியல் பல்வகைமை விதிகள் - 2017 பிரிவு 20-ன் G.O (Ms) No.137 சுற்றுச்சூழல் மற்றும் வனவியல் (FR.5) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்நகராட்சியின் எல்லைக்குட்ப்பட்டபகுதிகளில் உள்ள தனித்துவமிக்க தாவரங்கள் மற்றும் பல்லுயிர்களின் பாதுகாப்பிற்க்காக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட **பல்லுயிர் மேலாண்மைக் குழு** அமைக்கப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**பல்லுயிர் மேலாண்மைக் குழு உறுப்பினர்கள்**

| வரிசைஎண் | உறுப்பினர் பெயர் | பதவி |
|---|---|---|
| | திரு.ச.செல்வபாலாஜி. பி.இ,<br>ஆனையாளர், குடியாத்தம் நகராட்சி. | குழுத்தலைவர் |
| 1) | திரு.ஜெ.தமிழ்செல்வன், எம்.எஸ்.சி, எம்.பில்,எம்எட்,<br>க/எண்.30A, குமரன் தெரு,<br>கூடநகரம் ரோடு.குடியாத்தம் | உறுப்பினர் |
| 2) | திருமதி.ஆ.சாந்தி, எம்.எஸ்.சி, பி.எட்,<br>24/57, ஆஸ்டல் பின்புறம்,<br>கஸ்பா, குடியாத்தம் | உறுப்பினர் |
| 3) | திரு.மோ.கோபிநாத்<br>த/பெ.பி.மோகன்<br>சந்திரா இல்லம், 32B/49, கவரை தெரு,<br>கொண்டசமுத்திரம்,குடியாத்தம் | உறுப்பினர் |
| 4) | திருமதி.B.சித்ரா க/பெ.போகிந்தரன்,<br>ரேணுகாம்பாள் மகளிர் குழு, 40A, கவரை தெரு,<br>கொண்ட சமுத்திரம்,குடியாத்தம். | உறுப்பினர் |
| 5) | திருமதி.S.சந்திரா க/பெ.சீனிவாசன்,<br>துளசி மகளிர் குழு,<br>7/40, 2வது சிவகாமி அம்மன் தெரு,<br>நெல்லூர் பேட்டை,குடியாத்தம். | உறுப்பினர் |
| 6) | G.சம்பத் நாயுடு,<br>த/பெ.கோவிந்தசாமி நாயுடு,<br>பீமாபுரம் கிராமம்,<br>மேல் ஆலத்தூர் அஞ்சல்,குடியாத்தம். | உறுப்பினர் |

**சிறப்பு அழைப்பாளர்கள்** :

1. வனப் பாதுகாவலர், குடியாத்தம் சரகம்.
2. உதவி இயக்குநர் வேலாண்மை துறை, குடியாத்தம்.
3. வட்டார கல்வி அலுவலர், குடியாத்தம்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர், குடியாத்தம்.
5. உதவி இயக்குநர் தோட்டக்கலை, குடியாத்தம்.
6. கால்நடை மருத்துவர், குடியாத்தம்.

**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்.
**ந.க.எண்:-** 2040/2018/எச்1

5. இந்நகராட்சியில் ஒப்பந்தபணிகளில் பிடித்தம் செய்து வைக்கப்படும் வைப்பு நிதியில் ஒப்பந்ததாரர்களின் விண்ணப்பத்தின் பேரில் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்களின் குறிப்பின்படி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்பட்டு வருகிறது. தற்போது செந்தில் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் தாம் ஒப்பந்தம் எடுத்த கீழ்க்காணும் பணிகளுக்கான

ஒப்பந்தத்தில் செலவுப்பட்டியலில் பிடித்தம் செய்த முன்வைப்பு தொகை மற்றும் காப்பு தொகை கீழ்காணுமாறு பட்டியலிடப்பட்டு திரும்ப வழங்க கோரப்பட்டுள்ளது.

| நாள் | திட்டம் | தொகை ரூ. |
|---|---|---|
| 01.08.14 | பொது நிதி | 5000.00 |
| 18.02.14 | பொது நிதி | 5000.00 |
| | **மொத்தம் ரூ.** | **10000.00** |

மேற்குறிப்பிட்ட திட்ட பணிகளுக்கு தணிக்கையில் தடைபத்திகள் நிலுவையில் உள்ள காரணத்தினால் நீண்ட நாட்களாக வழங்கப்படாமல் இருந்தது. தற்போது தணிக்கை தடை பத்திகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பேரில் ஒப்பந்ததாரர் செந்தில் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு தொகை ரூ.10,000/- திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதி வழங்கலாம். **கோப்பு எண்:-** எச்3/584/2018

6. இந்நகராட்சியில் ஒப்பந்தபணிகளில் பிடித்தம் செய்து வைக்கப்படும் வைப்பு நிதியில் ஒப்பந்ததாரர்களின் விண்ணப்பத்தின் பேரில் சம்பந்தப்பட்ட பிரிவு அலுவலர்களின் குறிப்பின்படி வைப்புத்தொகை திரும்ப வழங்கப்பட்டு வருகிறது. தற்போது திரு.ஜெ.ஜெ,ஆனந்தகுமார், ஒப்பந்ததாரர் தாம் ஒப்பந்தம் எடுத்த கீழ்க்காணும் பணிகளுக்கான ஒப்பந்தத்தில் செலவுப்பட்டியலில் பிடித்தம் செய்த முன்வைப்பு தொகை மற்றும் காப்பு தொகை கீழ்காணுமாறு பட்டியலிடப்பட்டு திரும்ப வழங்க கோரப்பட்டுள்ளது.

| நாள் | திட்டம் | தொகை ரூ. |
|---|---|---|
| 31.10.13 | பொது நிதி 13-14 | 24443.00 |
| 27.09.13 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி நிதி 13-14 | 22500.00 |
| 02.02.16 | கல்வி நிதி 15-16 | 21500.00 |
| 03.01.14 | குடிநீர் நிதி 10-11 | 30000.00 |
| 03.04.14 | பொது நிதி 13-14 | 24895.00 |
| 05.09.14 | பொது நிதி 14-15 | 24895.00 |
| 30.08.12 | பொது நிதி 12-13 | 19159.00 |
| 27.01.16 | பொது நிதி 15-16 | 25000.00 |
| 17.03.16 | பொது நிதி 15-16 | 25000.00 |
| | **மொத்தம் ரூ.** | **217392.00** |

மேற்குறிப்பிட்ட திட்ட பணிகளுக்கு தணிக்கையில் தடைபத்திகள் நிலுவையில் உள்ள காரணத்தினால் நீண்ட நாட்களாக வழங்கப்படாமல் இருந்தது. தற்போது தணிக்கை தடை பத்திகள் நிவர்த்தி செய்யப்பட்டதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் அவர்களுக்கு தொகை ரூ.2,17,392/- திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதி வழங்கலாம். **கோப்பு எண்:-** எச்3/685/2018

7. இந்நகராட்சிக்கு சொந்தமான TN23CZ3137 ஈப்பு வாகனத்திற்கு M.RED.80D Exide Battery புதியதாக வாங்குவதற்கு ஆகும் செலவினம் ரூ.7,500/-ஐ (ரூபாய் ஏழு ஆயிரத்து ஐநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்அனுமதி பெற்று " **Vellore Battery Centre, Vellore**" நிறுவனத்தின் மூலம் பேட்டரி கொள்முதல் செய்து தொகை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம். **கோப்பு எண்:-** இ1/399/2017

**ஆணையாளர் / தனி அலுவலர்,**
**குடியாத்தம் நகராட்சி.**